# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
## சட்டக் கற்கைகள் திணைக்களம்
## சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 5
## இறுதிப் பரீட்சை- 2021/2022
## LLU5709/LWU3311 – நிர்வாகச் சட்டம்
## காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 12 ஜனவரி 2023 காலம் : மு.ப 9.30 – பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை- 08

ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. புவியியல் ஆய்வு மற்றும் கனிய வள பணியகம் பாராளுமன்ற சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும். இச்சபைக்கு ஏனைய அதிகாரங்களுடன் கனியப் பொருட்கள் தொடர்பான ஆய்வுபணி, கனிய வள செயன்முறை, கனிமங்களின் போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி ஆகிய விடயங்கள் தொடர்பில் உரிமப் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான அதிகாரம் உள்ளது. உரிமப் பத்திரம் வழங்குதல் தொடர்பாக குறிப்பிட்ட சட்டம் பின்வரும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

   பிரிவு 29 (அ) – சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட அமைப்பு ஒன்றான ஆய்வு மற்றும் கனியப் பொருட்கள் சபையிடமிருந்து அறிக்கையொன்றை பெற்றுக் கொண்ட பின்பு மாத்திரமே பணியகத்திற்கு உரிமப் பத்திரம் வழங்கும் அதிகாரம் உள்ளது.
   பிரிவு 29 (ஆ) - கனியப் பொருட்கள் தொடர்பான ஆய்வுபணி, கனியப் பொருட்கள் போக்குவரத்து, செயன்முறை வர்த்தகம் அல்லது ஏதேனும் கனியப்பொருள் தொடர்பான ஏற்றுமதி ஆகிய விடயங்கள் தொடர்பில் பகிரங்க அதிகாரி அல்லது ஏதேனும் மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபையில் பணி புரிகின்ற பணியாளாக இருக்கும் தனிப்பட்ட ஒரு நபருக்கு உரிமப் பத்திரம் வழங்குதல் ஆகாது.
   பிரிவு 40 - பணியகத்தினுடைய தீர்மானம் முற்றும் முடிவானதுடன் எந்த நீதிமன்றத்திலும் சாவாலுக்கு உட்படுத்த முடியாது.

   அண்மையில் பதிவு செய்யப்பட்ட கனியப்பொருட்கள் ஏற்றுமதி கம்பெனியொன்றினுடைய உரிமையாளரான காமினி என்பவர் ரொசல்ல பிரதேச சபைக்குள் அமைந்துள்ள அவருடைய 20 ஏக்கர் காணியில் உள்ள கனியப்பொருட்களை ஆய்வு செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் உரிமப்பத்திரமொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பபடிவமொன்றை அனுப்பி வைத்தார். பணியகத்தின் இயக்குனர் எந்தவிதமான காரணங்களும் தராது அவருடைய விண்ணப்பத்தை நிராகரித்தார். எனினும் தன்னுடைய காணிக்கு அயலில் உள்ள ரொசல்ல பிரதேச சபை தலைவருக்கு சொந்தமான காணி தொடர்பில் சபை, சட்டத்தின் பிரிவு 29 ற்கு முரணாக உரிமப்பத்திரமொன்றை வழங்கியுள்ளதை காமினி கண்டு பிடித்தார். குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய காமினிக்கு ஏதேனும் பரிகாரங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் அவருக்கு ஆலோசனை வழங்குக.
   உமது விடையை நிர்வாகச் சட்ட எண்ணக்கருக்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. (அ) உறுதிகேள் எழுத்தாணை வழங்குதல் தொடர்பில் சரியான வரையறைகள் ஒரு போதும் முழுமையாக தீர்மானிக்கப்படவில்லை. தற்போதைய நிலைமையின் படி, அதனுடைய எல்லை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதுடன் சட்டத்தின் கீழ் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

*R* v *Electricity Commissioner* வழக்கில் Atkin L.J இனால் குறித்துரைத்தவாறு உறுதிகேள் எழுத்தாணை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் தொடர்பில் இருக்கின்ற அண்மைக்கால விருத்திகளை ஆராய்க.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

(ஆ) நீதிமன்றங்களினால் ஆணைகள் வழங்கப்படாமை தொடர்பில் இருக்கக்கூடிய காரணங்களை ஆராய்க.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

(05 புள்ளிகள்)

3. (அ) சகன் என்பவர் 22.06.2020 இல் இருந்து அமுலுக்கு வரக்கூடிய வகையில் கல்கடுவ தேசிய பாடசாலைக்கு ஆங்கில மொழி உதவி ஆசிரியராக பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்பட்டார். பாடசாலை அபிவிருத்தி சபையின் செயலாளரினால் சகனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் முதல்நிலை விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. தென் மாகாண கல்விச் செயலாளர் சகனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடாத்த விசாரணைக் குழுவொன்றை நியமித்தார். குறிப்பிட்ட விசாரணைக்குழு கல்கடுவ தேசிய பாடசாலை அதிபர் உள்ளடங்கலாக மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது. குறிப்பிட்ட குழு 04.04.2022 அன்று விசாரணையொன்றை மேற்கொள்ள தீர்மானித்தது. குறிப்பிட்ட விசாரணை திகதியன்று பாடசாலை அபிவிருத்தி சபையின் செயலாளர் குறிப்பிட்ட விசாரணைக் குழுவின் தலைவருடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டதை தான் கண்ணுற்றதாக சகன் சாடுகிறான். விசாரணையை அடுத்து தென் மாகாண கல்வி செயலாளர் சகனுக்கு எதிராக ஒழுக்காற்று கட்டளை ஒன்றை வழங்கினார். இக்கட்டளையின் அடிப்படையில் சகனுடைய சேவை 06.06.2022 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் முடிவுறுத்தப்பட்டது. சகன் பன்னிரெண்டு குற்றச்சாட்டுக்களில் எட்டு குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக காணப்பட்டார்.

மேலே தரப்பட்ட சம்பவத்தின் கீழ் உள்ள சட்ட விளைவுகளை ஆராய்க.

குறிப்பிட்ட விசாரணைக் குழுவின் தீர்மானத்தை நீதிமன்றத்தின் முன் ஆட்சேபனைக்கு உட்படுத்த முடியுமா என்பது தொடர்பில் சகனுக்கு அறிவுரை வழங்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) பாரபட்சத்தை தீர்மானிப்பதற்கு உருவாக்கப்பட்ட பல எண்ணிக்கையிலான பரீட்சைகள் உள்ளன. இப்பரீட்சையை பிரயோகிப்பதன் மீது இலங்கை நீதிமுறை பயன்படுத்துகின்ற அணுகுமுறையை ஆராய்க.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

(05 புள்ளிகள்)

4. (அ) இலங்கையில் விளம்பல் கட்டளையொன்றை வழங்குதல் தொடர்பில் இருக்கக்கூடிய சர்ச்சைக்குரிய நியாயாதிக்கம் தொடர்பான பிரச்சினைகளை விமர்சித்து ஆராய்க.

(05 புள்ளிகள்)

(ஆ) "அண்மைக்காலங்களில் விளம்பல் தீர்மானம் நிர்வாகச்சட்டத்தின் கீழ் பரிகாரம் வழங்குவதற்கு விரைவான பரிகாரம் ஒன்றாக இருப்பினும் கூட, அதன் கீழ் இருக்கக்கூடிய கணிசமான அளவு நன்மைகளை கருத்தில் கொண்டு இன்னும் அப்பரிகாரம் முதன்மை நிலையை அடையவில்லை"

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? விளம்பல் கட்டளையொன்றுடன் ஒப்பிடும் போது பகிரங்க சட்டத்தின் கீழ் இருக்கக்கூடிய நிவாரணங்களின் தீமைகளை பரீட்சிக்க.

(15 புள்ளிகள்)

5. (அ) கீழே தரப்பட்ட கட்டளைகளின் வலிதாந்தன்மையை ஆராய்க. உமது விடையை நிர்வாகச் சட்ட எண்ணக்கருக்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

i. ஐஸ்லாந்து பாராளுமன்றம் நாட்டில் ஒலிபரப்பு சேவைகளை ஒழுங்கமைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதற்கு ஒரு தேசிய ஒலிபரப்பு அதிகார சபை சட்டத்தை ஆக்கியது. இச்சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் ஒரு தனியார் ஒலிபரப்பு நிறுவனத்தின் ஒலிபரப்பு உரிமப்பத்திரத்தின் ஏதேனும் இரத்து தொடர்பில் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு விண்ணப்படிவமும் இரத்து செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் மேன்முறையீட்டு சபைக்கு மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய அதிகார சபை, சட்டத்தின் பிரிவு 20 இற்கு முரணாக இரத்து செய்யப்பட்டதிலிருந்து விண்ணப்பம் இரண்டு வாரத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒழுங்கு விதியை உருவாக்கியது.

ii. நியூஸிலாந்தினுடைய சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 30 சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மின்சார வாகனங்களுடைய செலவு எட்டு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற போது கட்டணமொன்றை விதிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது. பணிப்பாளர் நாயகம் மேலே குறிப்பிட்ட கட்டணத்தை 2022 ஒக்டோபரில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் 20% இனால் அதிகரித்தார்.

(06 x 2 = 12 புள்ளிகள்)

(ஆ) "... ஒரு சட்டவாக்கம் தொடர்பில் பிரயோகிக்கக்கூடிய ஜனநாயக பாதுகாப்புகள் கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் தொடர்பில் இல்லை. ஆகவே இத்துறையில் சில கட்டுப்பாடுகளும் பாதுகாப்புகளும் அவசியமாகும்."

*M.P. Jain & S.N.Jain, Principles of Administrative Law* (6th edi.2010)

நிர்வாகச் சட்ட எண்ணக்கருக்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் இக்கூற்றை ஆராய்க.

(08 புள்ளிகள்)

6. கொஸ்கொட நகரசபை தனது பிரதேசத்திற்குள் இருக்கின்ற இயற்கை வளங்களையும் சுற்றாடல் செல்வங்களையும் பாதுகாப்பதற்கான அதிகாரங்களை பெற்றுக் கொண்டுள்ளது. கொஸ்கொட கிராமம் ஆனது கொஸ்கொட ஏரி மற்றும் ஆறு ஆகிய இரண்டின் இருபுறத்திலும் உள்ள நிலப்பரப்பில் அமைந்துள்ளது. கொஸ்கொட கிராமவாசிகள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் நகரசபையை நடவடிக்கைகளை எடுக்குமாறு பல தடவைகள் எழுத்து மூலமான கோரிக்கைகளை விடுத்தனர்.

(அ) கொஸ்கொட ஏரி அமைப்பின் ஆயுளிற்கும் அதன் பல்லுயிரியத்திற்கும் தீவிரமான அச்சுறுத்தலையும் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்ற சட்ட விரோதமான மணல் அகழ்வு நடவடிக்கை, மற்றும் ஆற்றங்கரையில் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்ட விரோதமான கட்டுமானப் பணிகள் என்பவற்றை முற்றாக தடைசெய்தல்.

(ஆ) ஆற்றங்கரையை சூழவுள்ள ஈரநிலங்கள் கடுமையான மழைக்காலங்களின் போது மழை நீரை உறிஞ்சிக் கொள்வதற்கு கடற்பாசியாக அமைவதாலும் இயற்கையான கழிவகற்றல் மூலமாக நீரை அகற்றுவதற்கும் ஒரு பெறுமதிமிக்க செயற்பாட்டை புரிவதனால் கொஸ்கொட ஆற்றின் மீது இருக்கக்கூடிய அதிகாரமளிக்கப்படாத தடைகளை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

(இ) கொஸ்கொட ஆற்றின் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது கைக்கொள்ளலில் இருக்கும் ஆட்களுக்கு வெளியகற்றல் அறிவித்தலை வழங்குதல்.

எனினும் இதுவரையில் மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் நகர சபை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நகர சபைக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்றை எடுக்க முடியுமா என கொஸ்கொட பிரதேச வாசிகள் உம்மிடம் ஆலோசனையொன்றை கேட்கின்றனர்.

அறிவுரை வழங்குக. உமது விடையை பொருத்தமான சட்ட ஆதாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

7. "நவீன நிர்வாகச் சட்டத்தின் கீழ் முழுமையான தற்துணிவு அதிகாரம் என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது ஆகும்."

*Gunathilaka* v *Weerasena 2000 (2)Sri L.R 1*

நிர்வாகத் தற்துணிவு அதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றங்களினால் உருவாக்கப்பட்ட இயைபான எண்ணக்கருக்களை குறிப்பிட்டு மேலே தரப்பட்ட கூற்றை ஆராய்க.

(20 புள்ளிகள்)

8. நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபை (CAA) சிறிலாந்தினுடைய பாராளுமன்ற சட்டமொன்றின் கீழ் உருவாக்கப்பட்ட நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். பலதரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் CAA அதிகாரம் கொண்டிருந்தது. மேலும் CAA குறிப்பிட்ட அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்ட தராதரங்கள் மற்றும் அளவுகோல்களுக்கு அமைவாக இல்லாத உற்பத்தி, தயாரிப்பு, விநியோகம், களஞ்சியப்படுத்துகை போக்குவரத்து அல்லது ஏதேனும் பொருட்களின் விற்பனை மற்றும் ஏதேனும் சேவைகளின் விநியோகம் தொடர்பில் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் அதிகாரம் கொண்டிருந்தது. சட்டம் பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது.

(அ) பொருட்கள் அல்லது சேவைகளில் உள்ள குறைபாடுகளினால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு, CAA அதிகாரம் பெற்றிருந்தது. இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஆலோசனைக்குழு என்ற நியதிச்சட்ட அமைப்பிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொண்ட பின்பு மாத்திரமே இழப்பீடு வழங்க முடியும்.

(ஆ) குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 12 இழப்பீடுகள் வழங்குதல் தொடர்பான அதிகார சபையுடைய தீர்மானம் முற்றும் முடிவானது என்பதுடன் எந்த நீதிமன்றத்தின் முன்பும் கேள்விக்கு உட்படுத்த முடியாது.

சிறிலாந்தில் ஒரு தொடர்ச்சியான சமையல் எரிவாயு கொள்கலன்களின் வெடிப்புகள் அறிக்கையிடப்பட்டன. அதிகார சபை கொள்கலன்களில் இருந்த எரிவாயுவின் உள்ளடக்கம் தொடர்பில் பல முறைப்பாடுகளை பெற்றுக் கொண்டது. சமையல் எரிவாயு கொள்கலன்களின் வெடிப்புகளைத் தொடர்ந்து அதிகார சபை நட்ட ஈட்டுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது.

கொள்கலன் வெடிப்பினால் தனது வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்தமையை மீள்கட்டுமானம் செய்வதற்காக நட்ட ஈடு கோரி சமையல் எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுள் ஒருவரான பண்டார என்பவர் விண்ணப்பபடிவம் ஒன்றை அனுப்பி வைத்தார். எனினும் அதிகார சபையின் தலைவர் ஆலோசனைக்குழுவின் அறிக்கையை பெறாது பண்டாரவின் விண்ணப்பத்தை நிராகரித்தார். CAA தலைவருடைய தீர்மானம் முற்றும் முடிவானது எனக் குறிப்பிட்டது.

தலைவருடைய தீர்மானத்தை நீதிமன்றம் ஒன்றில் ஆட்சேபிக்க முடியுமா என அறிந்து கொள்ள பண்டார உங்களது ஆலோசனையை நாடுகிறார்.
சிறிலாந்தினுடைய பொருள்கோடல் சட்டம் இலங்கையின் இல.18, 1972 ஆம் ஆண்டின் பொருள்கோடல் (திருத்தப்பட்ட) சட்டத்தை ஒத்தது என கருதி அவருக்கு ஆலோசனை வழங்குக. உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

***பதிப்புரிமை பெற்றது***